1993 மார்ச் 30]

சாலையைத் தொடங்குவதற்கு அரசு பல்வேறு சலுகைகளை அளித்து வருகின்ற தருணத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி நபர் மூலம் அத்தகைய தொழிற்சாலையைத் தொடங்க முன்வருவார்களேயானால் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாயுள்ளம் கொண்ட அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

161—

பி.எஸ்.ஸி, (ஊரக வளர்ச்சி) பட்டப்படிப்பிற்கு அங்கீகாரம்.

*9017 திரு. க. வெ. வீ. இ ராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் தற்போது போதிக்கப்படும் பி.எஸ்ஸி. (ஊரக வளர்ச்சி பாடம்) பட்டப் படிப்பிற்கு அங்கீகாரம் வேண்டி அரசுக்கு மனுக்கள் வந்துள்ளதா?

(ஆ) அங்கிகாரம் வழங்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

168—

தெப்பப்பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அனாகவள்ளி ஓடைத் திட்டம்.

*9763—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, வத்தலகுண்டு பிர்கா தெப்பப்பட்டி அருகில் கட்டப்பட்டுள்ள அனாகவள்ளி ஓடைத் திட்டம் இன்னும் முடிவுபெறாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) திட்டப்பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

172—

நேப்பியர் பூங்காவில் பாதி இடத்தை விளையாட்டு மைதானமாக மாற்றல்.

*9258—திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

சேப்பாக்கம் தொகுதி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த விளையாட்டு மைதானத்தை ரயில்வே நிலையமாக மாற்றி அமைத்துக் கொண்டிருப்பதால் நேப்பியர் பூங்காவில் பாதி இடத்தை விளையாட்டு மைதானமாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

சேப்பாக்கம் தொகுதி சிந்தாதிரிப்பேட்டையிலிருந்த நேப்பியர் பூங்காவின் (மேதின பூங்கா) எதிரில் அமைந்திருந்த விளையாட்டு மைதானம் சென்னை நகர விரைவு இரயில் போக்குவரத்திற்கு தேவைப்பட்டதால் 1987-ல் தென்னக ரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்டது. அச்சமயத்தில் விளையாட்டு மைதானத்திலிருந்து பளுதூக்கும் மற்றும் விளையாட்டு கருவிகள் அனைத்தும் நேப்பியர் பூங்காவின் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் நன்கு உயரமாக வளர்ந்துள்ள அசோகா, அரச மரம் போன்ற நிழல்தரும் மரங்கள் பூங்கா முழுவதும் பரவலாக உள்ளன. இப்பகுதியில் வேறு திறந்த வெளிப்பகுதி இல்லை. இப்பகுதிவாழ் மக்களுக்கும் மாணவர்களுக்கும் நன்கு பயன்பட்டு வரும் நேப்பியர் பூங்காவினை விளையாட்டு மைதானமாக்க வேண்டிய அவசியமில்லை.